Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 171

National Tamil Daily தேசிய தினசரி

(2-8-65)

விசுவாவசு ஆடி 18 ரபி: ஆகிர் பிறை 4 திங்கட்கிழமை

சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு
போன்: 585

Phone: 585
K. N. M.
மீருன் சாஹிப்
தங்கப்பவுன் நகை மாளிகை
கன்னாதிட்டி, - யாழ்ப்பாணம்.

# இலங்கைக்கு டெலிவிஷன்

## சாத்தியக் கூறுகள் குறித்து ஒலிபரப்பு, தகவல் கமிஷன் ஆராயும்

### விசாரணை நடத்த 7 பேர் குழு நியமிக்கப்பட்டது

கொழும்பு, ஞாயிறு

**இலங்கையின் ஒலிபரப்பு தகவல் சேவைகளின் நிலைமை குறித்து ஆராய்ந்தறியும் பொருட்டு விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவினால் நேற்று நியமிக்கப்பட்ட இக்கமிஷன் விரைவாக தனது விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்.**

இக்கமிஷனில் திரு. எச். ஜே. ஹுலுகல்ல, கெட்டி ஆலதேரோ, திரு. ஹெல்ல பொல, திரு. எஸ். ராசநாயகம், திரு. எச். எஸ். இஸ்மாயில், திரு. ஆர். எச். போல், திரு. பியசேன நிலங்கா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு விஷயங்கள் குறித்து ஆராயும் இக்கமிஷன், இலங்கையில் டெலிவிஷன் அமைப்பது குறித்தும் விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்.

○ இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளின் தரம், அவை பெறப்படும் விதம், ஒலிபரப்பப்படும் முறை ○ செய்தி அறையின் அமைப்பு ○ போதுமான தளபாடங்கள் இருக்கின்றனவா, அல்லது மேற்படி தேவையான தளபாடங்கள், ○ இலங்கை வானொலியில் அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதின் சாத்தியக்கூறுகள், ○ டெலிவிஷன் அமைப்பதற்கான வசதிகள் ஆகிய பல்வேறு விஷயங்கள் குறித்தும் இக்கமிஷன் பூரணமாக விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்கும்.

இலங்கையின் ஒலிபரப்பு தகவல் சம்பந்தமாக விசாரணைகள் நடத்தும் பொருட்டு கடைசியாக 1958-ல் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தது.

## மேலதிக பஸ்கள்

பருத்தித்துறை ஞாயிறு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவ கால இறுதிநாள் விழாக்களின் போது பிரயாணஞ் செய்யும் அடியார்களின் வசதிக்காக பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ மேலதிக பஸ்களைச் சேவைக்குவிட முன்வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது இந்தடிப்போவில் சேவைசெய்யும் சுமார் 40 பஸ்களுடன் மேலும் 20 பஸ்களை பெற்று 60 பஸ்கள் சேவைக்கமர்த்தப்படுமெனவும் யாழ்ப்பாணம், கீரிமலை, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களிலேயே இப் பஸ்களின் சேவை நடாத்தப்படுமெனவும் கூறப்படுகிறது.

—

## இப்படியும் நடந்தது!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண வீதிகளில் தெருவோரத்துத் திரியும் பல தரப்பட்ட நாய்களை (கட்டாக்காலி நாய்களை) யாழ்ப்பாண மாநகரசபையினர் பிடிப்பதும் யாவரும் அறிந்ததே.

நேற்று முன்தினம் காலை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு அண்மையில் வீதியில் நின்ற நாயொன்றை நாய் பிடிப்பவர். வலையம் எறிந்து பிடித்தபொழுது ருசிகரமான சம்பவம் நடைபெற்றது. நாய் பிடிப்பவர் அந்த நாயை பிடித்ததும் அந்த நாய்க்குச் சொந்தமானவர்கள் ஓடோடி வந்து; "நாங்கள் பணம் தருகிறோம் நாயை விடு, விடு" என்று கூக்குரலிட்டனராம். நாய்பிடிகாரர் கையை உயர்த்தி சுட்டு விரலால் 'ஒன்று' என்று சைகை காட்டினராம். சில விநாடிக்குள் பணம் கொடுக்கப்பட்டதாம். அத்துடன் நாயும் விடப்பட்டதாம்!

## பஸ் கண்டக்டர் இன்னும் வீடு திரும்பவில்லை!

### வேலை நிறுத்தம் செய்யப்போவதாக பஸ் தொழிலாளர்கள் பயமுறுத்தல்

பருத்தித்துறை, ஞாயிறு

கடந்த புதன்கிழமை காலை பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ்ஸில் கொடிகாமம் — பருத்தித்துறை ரஸ்தாவில் கண்டக்டராக சேவையில் ஈடுபட்டிருந்து திடீர் பரிசோதனைக் குழுவினரால் பரிசோதிக்கப்பட்ட சமயம் பஸ்ஸை விட்டும், பின் பரிசோதனை குழுவினரின் காரை விட்டும் குடிமறைந்துவிட்டதாகக் கூறப்படும் கண்டக்டர் வி. ராமசாமி இன்றுவரை வீட்டிற்கோ, டிப்போவிற்கோ வந்துசேரவில்லையெனத் தெரிய வருகிறது.

இன்று ஆறாவது தினமாகும். உறவினர்களும் நண்பர்களும் தொடர்ந்து தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதுடன் பிற இடங்களுக்கும் தந்திச் செய்திகள் கொடுத்துள்ளனர்.

மேற்படி கண்டக்டர் சமூகத்தின் சங்கிலியும் கையில் மோதிரங்களுமாக சுமார் 2000 ரூபா பெறுமதியான பொருட்களுடன் இருந்தாரெனச் சொல்லப்படுகிறது.

கண்டக்டரின் தலைமறைவுக்கு காரணங்கள் பற்றி தெளிவான விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் விரைவில் மேற்படி டிப்போவைச் சேர்ந்த பஸ் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வர் என தொழிலாளர் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

—

## பிரான்ஸ் அறிவிப்பு

பாரிஸ், ஆ. 1

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் கூட்டு இராணுவப் பயிற்சியில் கலந்துகொள்ள முடியாதென்று வடக்கு அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளுக்கும் பிரான்ஸ் முறையாக அறிவித்தது.

## இன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஈழத்திலே பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் திருவிழாக்கள், இன்று நடைபெறும் கொடியேற்றவிழாவுடன் ஆரம்பமாகின்றன. இன்று தொடக்கம் இருபத்தைந்து நாட்களுக்கு திருவிழாக்கள் நடைபெறும். இம் மாதம் இருபத்தைந்தாம் திகதி தேரும், இருபத்தாறாம் திகதி தீர்த்தமும் இருபத்தியேழாம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும்.

### பகல் 1-30க்கு கொடியேற்றம்

கொடியேற்றம் இன்று பகல் 1-30க்கு நடைபெறும். காலைப் பூசை பகல் 12-00 மணிக்கும் வசந்தமண்டபபூசை 12-30க்கும் உச்சிகாலப்பூசை பிற்பகல் 3-00க்கும் நடைபெறும்.

## மீனவர்களுக்கு ஓர் இன்சூரன்ஸ் திட்டம்

### மீன்பிடி கார்ப்பரேஷன் தயாரிக்கிறது

கொழும்பு, ஞாயிறு

மீனவர்களுக்கான ஒரு இன்சூரன்ஸ் திட்டத்தைத் தயாரிப்பதில் மீன்பிடி கார்ப்பரேசன் இப்பொழுது ஈடுபட்டுவருகிறது.

இத்திட்டத்தின்கீழ், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் முழு மீன்களையும் மீன்பிடி கார்ப்பரேஷனுக்கு கொடுக்கவேண்டும். இவர்கள் கொடுக்கும் மீனுக்கு வழங்கப்படும் பணத்தில் ஒருபகுதி இன்சூரன்ஸ் பணமாகக் கழிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் மீனவர்களின் வள்ளங்களுக்கு படகுகளுக்கு சேதமேற்பட்டால் நஷ்டஈடு கொடுக்கப்படுவதுடன் அவர்களுக்குக் காயம் அல்லது மரணம் ஏற்படும் பட்சத்தில் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிகளும் வழங்கப்படும்.

மீன்பிடிக்க முடியாத காலத்தில் மீனவர்களுக்கு நிதியுதவிகள் வழங்குவதற்கு கார்ப்பரேஷன் திட்டமொன்றைக் கொண்டுவருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## "வியட்னாம் நிலைமை இங்கும் ஏற்படலாம்"

### தர்மகுலசிங்கம் நினைவு தின கூட்டத்தில் எட்மண்ட் சமரக்கொடி

பருத்தித்துறை ஞாயிறு

"இன்றைய அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருந்தால் இலங்கையிலும் வியட்னாம் நிலைமை ஏற்படலாம். ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மையாகவே இருந்துவரும், இவ்வரசு ஏகாதிபத்திய நாடுகளுக்கு இலங்கைமேல் ஏற்பட்டுள்ள மோகம் இதைத் தெளிவுபடுத்துகிறது. மேற்படி நாடுகள் பணஉதவி அளிப்பதும் தமது செல்வாக்கை நிலைநாட்டவே யாகும்.

இவ்வாறு புரட்சிவாத சமசமாஜக்கட்சியைச்சேர்ந்த திரு எட்மண்ட் சமரக்கொடி பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற ஜெயம் தர்மகுலசிங்கம் நினைவுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வழக்கறிஞர் திரு கே. ... திடபி.... தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தேசிய அரசாங்கம் தமிழ் பேசும் மக்களது உரிமைகளையோ இழந்த உரிமைகளையோ கொடுத்துவிடப் போவதில்லை. 24 மணித்தியாலத்தில் அதிசயங்கள் நடப்பதில்லை. சமஷ்டிக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்தது அவசியமானதே. பிலிப் குணவர்த்தன, கே எம் பி ராஜரத்ன ஐ தே க கும்பலுடன் சேர்ந்தது சிங்கமும் ஆடும் சேர்ந்தது போன்றதாகும்.

பழைய அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் மொழிக்கொள்கையில் பண்டாரநாயக்காவின் அடிச்சுவட்டை அனுசரித்ததாககூறி அதைக்கைவிட்டு முற்றிலும் முரணாக, அதேபோல 1968 வரை அவகாசம் கொடுத்து அவர்கள் சிங்களத்தைக் கட்டாயமாக்குகிறது. அந்த நிலையில் தமிழரசு, தமிழ் காங்கிரசின் சேர்க்கை என்னத்தைச் சாதிக்கப்போகிறது.

சமசமாஜக்கட்சித் தலைவர்கள் 30 வருடகாலமாகப் பொதுமக்களிடம் பெற்று வந்த நம்பிக்கையை ... ... ... ...ததினால் இழந்து ... ... ...விட்டனர் ... ... ... ...த்தில் இருந்து ... ... காலத்தில் ... ... வந்தது

(6-ம் பக்கம் ... )

—

## கெருடமடு தீர்த்தம்

... ஞாயிறு

தோற்சவவைபவம் கெருடமடு தீர்த்தக்கேணியில் நடைபெற்றது. ஆடி அமவாசை அனுஷ்டித்த ஏராளமான பக்தர்கள் கெருடமடுவில் தீர்த்தமாடி தானதோன்றி ஈசுவரர் அனுக்கிரகத்தைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

தெய்வத்திடம் பூரணமாகத் தஞ்சமடைந்தவர்களுக்கு எவ்வித பயமுமிராது. சங்கடம் ஏற்படும்போது அதுவும் நம் நன்மைக்கே என்ற உணர்ச்சியுடன் எதிர்நோக்க வேண்டும், அவற்றைத் தீர்க்கவேண்டுமென்று கேளாமல், அவற்றில் அவருடைய விருப்பத்தை நாம் காணக்கூடியவாறு செய்யவேண்டுமென்றே பிரார்த்திக்க வேண்டும்.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி ௴ 18 ௳ (2-8-65)

## சர்வகலாசாலையில் துவேஷக் கல்வி!

சர்வகலாசாலையில், இன, மத, ஜாதிபேதம் வளர்க்கப்படுவதாகவும் பிரிவினை அரசியலும் வேற்றுமைகளும் இங்கு உருவாவதாகவும் கல்விமந்திரி பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கிறார். நாட்டின் நலனில் அக்கறையுடையவர்கள் கல்விமந்திரி வெளியிட்டுள்ள இத்தகவல்களைக் கண்டு கவலைகொள்ளாமலிருக்க முடியாது.

ஜாதி, மத, இன வேற்றுமைக் கோஷம் இலங்கைக்குப் புதியதல்ல. ஐரோப்பிய சர்வகலாசாலைகளிலும் சில வருடங்களுக்கு முன்னர் யூத கல்விமான்களுக்கெதிராக வேற்றுமைக் கோஷம் ஒலித்தது. கலாசார ஸ்தாபனங்களிலும் கலாசார ஸ்தாபனங்களல்லாதவைகளிலும் காணப்படும் இந்த இன, மத, வேற்றுமைகளும் குரோதங்களும் சமுதாயத்தின் நோய்களை பிரதிபலிப்பனவைதான். பிரிவினையும் வேற்றுமையும் சர்வகலாசாலையின் வியாதியல்ல. 1920-ம் ஆண்டிலிருந்து இது ஒரு தேசிய வியாதியாக மலிந்துவிட்டது. அரசியல்வாதிகளின் ஜாதி, மத, இன துவேஷக் கூச்சல்களால் எங்களின் பொன்னான நேரமும் சக்தியும் வீண் விரயமாகிவிட்டது. இலங்கையில் நடைபெற்ற முதலாவது தேர்தல் போட்டியிலேயே ஜாதி வேற்றுமைக் கூச்சல் கிளப்பப்பட்டது. 1920-ம் ஆண்டிலிருந்து 1947-ம் ஆண்டுவரை நடைபெற்ற அரசியல் சீர்திருத்த பேச்சுவார்த்தைகள் யாவற்றிலும் சிங்கள தமிழ் விகிதாசாரப் பிரச்னையே முதலிடம் பெற்றிருந்தது. பார்லிமெண்டரிப் பெரும்பான்மை ஆட்சி என்பது இங்கு வகுப்புவாதப் பெரும்பான்மை ஆட்சி என குழப்பப்பட்டுள்ளது.

சர்வகலாசாலையொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று 1095-ம் ஆண்டில் முதல் குரல் எழுப்பப்பட்டது. இருபதாம் ஆண்டில் கொழும்பில் உண்மையான சர்வகலாசாலை நிறுவப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக சர்வகலாசாலை அமைக்கும் இடம் சம்பந்தமாக எழுந்த இன, மத சர்ச்சை காரணமாக அப்பொழுது சர்வகலாசாலை நிறுவப்பட முடியாதுபோய்விட்டது. கடைசியில் 1948ம் ஆண்டில்தான் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு சர்வகலாசாலை, உத்தியோகம் பெறுவதற்குத் தகுதி பெறும் ஒரு ஸ்தாபனமாகத் தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளதேயன்றி கல்வித் தகுதி பெறும் ஸ்தாபனமாகக் கணிக்கப்படவில்லை. சர்வகலாசாலையில் இன, மத, வேற்றுமைகளும் பிரிவினைகளும் உருவாவதற்கு இதுவும் ஒரு காரணம்.

சர்வகலாசாலையை கல்வித் தகுதி பெறும் ஸ்தாபனமாகவும் அங்கு கல்வி போதிக்கும் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கல்வியிலும் நாட்டின் எதிர்காலத்திலும் அக்கறையுடையவர்களாகவும் இருக்கவேண்டும். இல்லையேல் சர்வகலாசாலையில் உயர் கல்வி பெறச் செல்லும் மாணவர் நாட்டிற்கே கேடு விளைக்கும் குறுகிய இன, மத, ஜாதித் துவேஷங்களையே பயின்று வெளியேற முடியும். சர்வகலாசாலையில் உயர் கல்வியும் நல்லொழுக்கமும் பயிலவேண்டுமாயின் நாட்டின் அரசியல்வாதிகளும் அரசியல் தலைவர்களும் அதற்கு முதலில் வழிவிடவேண்டும். நாட்டில் வகுப்புத் துவேஷக் கூச்சல் இருக்கும்வரை அது சர்வகலாசாலையிலும் பிரதிபலிக்கத்தான் செய்யும். கல்வி முறையில் சீர்திருத்தம் செய்யத்தான்வேண்டும். அதற்கு முன் அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் தங்களைத் தாமே திருத்தம் செய்துகொள்ளவேண்டும்.

அரசியல் அறிஞர்: கலவியாளர்; தமிழ்க்காவலர்; கொடைவள்ளல்

# மணிவிழாக்காணும் செட்டிநாட்டரசர்

(ஆறு. அழகப்பன் எம். ஏ. விரிவுரையாளர் அண்ணாமலை பல்கலைக்கழகம்)

டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ஆகஸ்ட் 2ம் தேதியன்று அறுபதாண்டு நிறைவு விழாக் காண்கிறார்கள் என்ற செய்தி தமிழ் மக்களின் செவிகளில் தேன் போலப் பாயும் ஓர் இனிய செய்தியாகும். திருக்குறளை எல்லாக் கட்சியினரும் எல்லா மதத்தினரும் வேற்றுமை பாராட்டாது ஏற்றுப் போற்றிப் புகழ்வதுபோல எல்லோர் நெஞ்சங்களிலும் நல்ல ஒரு இடத்தைப் பெற்று பலராலும் பாராட்டப்படுகின்ற டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் பொதுமக்களுக்குப் புரிந்த பணிகளையும் அவர் தம் உயர்ந்த குணங்களையும் இந்நாளில் நினைவு கூர்தல் ராஜா சர் அவர்கள் செய்த அறச்செயல்களின் பயனைத் துய்த்து வரும் நாம் செலுத்தும் நன்றிக் கடப்பாடாகும்.

உலகிற்குத் தாம் செய்த அறச்செயல்களால் அரசரான செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் எல்லோரும் நினைத்து நினைத்து வணங்கத்தக்கவகையில் சிலை வடிவமான வரலாறு தமிழ் மக்கள் நன்கு அறிந்த ஒன்றாகும். அப்படிச் சிலைவடிவமான வள்ளல்- அறக்கடல்- அண்ணாமலை தந்த விலை மதிக்க முடியாத முத்துத்தான் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்.

கி. பி. 10ம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட மாமன்னன் இராசராசன் தான் ஆண்டு கொண்டிருந்த பொழுதே தனது மகன் இளவரசன் இராசேந்திரனைத் தான் ஈடுபட்டுவந்த எல்லாத்துறைகளிலும் ஈடுபடச் செய்து, தனக்குப் பின் தன் பெயர் விளங்க, ஆளும் தகுதி படைத்த சிறந்த ஒரு பேரரசனாகச் செய்தான் என்று தமிழ் நாட்டு வரலாறு கூறுகின்றது. இதே போன்று அரசர் அண்ணாமலை வள்ளல் தம் காலத்திலேயே முத்தையவேளைத் தான் ஈடுபட்டுவந்த



எல்லாத் துறைகளிலும் ஈடுபடச் செய்து தனக்குப் பின் தன் பணிகளைத் தொடர்ந்து செய்து ஒளிவிடும் உயர் பேராளராகச் செய்தார். தந்தையின் அடிச்சுவட்டை முத்தையவேள் தம் வாழ்விலும் அப்படியே பின்பற்றிச் சென்றுகொண்டிருக்கின்றார்கள்.

அண்ணாமலை என்ற தீபத்தில் ஏற்றிய முத்தைய தீபம் பிறந்த நாட்டிற்கும் குடிக்கும் மட்டும் இருளினை ஓட்டி ஒளி வீசித் தராமல் குன்றின் மேலிட்ட நந்தா விளக்காய் அண்ணாமலைமேல் அமைந்த பண்ணார் தமிழ் ஒளியாகத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் ஒளி கொடுக்க, அந்த நந்தா மணி விளக்காகிய ஒளியால் அறியாமை, வறுமை, துன்பம், துயரம் முதலிய மனிதனை வாட்டும் கொடிய இருள்கள் விலகியிருக்கின்றன.

### அரசியலில் முத்தையவேள்

முத்தையவேள் தான் வாழும் அரண்மனைக்கு ஒரு குடும்பத்தலைவர் எனத் தம் வாழ்வினை அமைத்துக்கொள்ளாமல் தமிழகத் தலைவர்களில் தலைசிறந்த ஒருவராக வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் தொடர்ந்து நிலைத்து நிற்க முடியாத அரசியலில் முத்தையவேள் தலைசிறந்த அரசியல் அறிஞராகத் திகழ்ந்து வருகின்றார்கள். இன்றைக்கு இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அரசியலில் ஈடுபட்ட அரசியல்வாதிகளில் எல்லோரையும் விடக் காலத்தாலும் அனுபவத்தாலும் மூத்தவர் முத்தையவேளாவார்கள். இன்று காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் அரசர் முத்தையா முன்பு நீதிக்கட்சியில் பெரும் பங்குபெற்றவர்களாவார்கள். 1931-ம் ஆண்டு சட்டசபையில் நீதிக்கட்சியின் கொறடாவாகவும் அதன் தலைவராகவும் சட்டமன்றத்தில் அரும்பணியாற்றியுள்ளார்கள். 1937—39-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் சென்னை மாநிலப் பிரதம மந்திரியாக இருந்த பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கின்றார்கள்.

தமிழக அமைச்சர் பதவியினை அரசர் முத்தையா இருமுறை ஏற்கவேற்றதுண்டு. 1936—37-ம் ஆண்டில் திரு பொப்பிலி அரசரின் அமைச்சரவையில் சென்னைக் கல்வி நலத்துறை, ஸ்தலஸ்தாபனத்துறை அமைச்சராகவும், 1937-ல் ஏற்பட்ட இடைக்கால அமைச்சரவையில் திரு. கே. வி. ரெட்டி அவர்களின் [illegible] நிலையப் பாதுகாப்பு அமைச்சராகவும் திகழ்ந்தார்கள். இப்பதவிக்காலங்களில் சென்னை முனிசிப்பல் சட்டம், திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் பற்றிய மசோதா நகர அபிவிருத்தி அறிவியைச் சீர்திருத்தம் இந்திய மருத்துவர்கள் உரிய மதிப்பினைப்பெறச் செய்தல் போன்ற குறிப்பிடத்தக்க இவைகளைச் சட்டசபையில் நிறைவேற்றிப் பொதுமக்கள் பாராட்டைப் பெற்றார்கள். மேலும் இன்றுள்ள மடங்கள் கலைந்துபோகாமல் நிலைபெறச் செய்ய தகுந்த சட்டங்களையும் இயற்றினார்கள்.

அரசர் மக்கள்மன்ற உறுப்பினராக 1930 முதல் தொடர்ந்து இருந்து வருகின்றார்கள். ராஜாசர் அவர்கள் தேர்தல்களில் பலமுறை போட்டியில்லாமலும், போட்டியிருந்தால் அளவுகடந்த வெற்றியும் பெற்றிருக்கின்றார்கள். இந்திய சுதந்திரத்திற்குமுன் 1946ல் அமைக்கப்பட்ட டெல்லி சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாசர் அவர்கள் இந்திய அரசியல் அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரும் ஆவார்கள். பழுத்த அரசியல் அனுபவம்மிக்க முத்தையவேள் 1964 ஆம் ஆண்டுமுதல் சென்னை மேல்சபை அங்கத்தினராக இருந்து கருத்துமிக்க சொற்பொழிவுகளை ஆற்றி வருகின்றார்கள்.

கல்லூரி வாழ்வில் பட்டப் படிப்பில் அரசியலைப் பாடமாகக்கற்ற முத்தையவேள் பனகல் அரசரிடம் அரசியல் பயிற்சிபெற்று, துணிவு வீரம், பொறுமை நடுவு நிலைமை ஆகிய அத்தனை பண்புகளும் நிறையப்பெற்ற ஒரு நிறைகுடமாக அரசியல் உலகில் இன்று வாழ்ந்து வருகின்றார்கள்.

### முதல்வானொலி நிலையம்

பூர்வ இடமான கானாடுகாத்தானைச் சேர்ந்த முத்தையவேள் எத்தனையோ நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள புகலிடமான சென்னைக்குச் சீரும் சிறப்பும் தேடித்தந்திருக்கின்றார்கள். சென்னை நகராட்சி உறுப்பினராக 1930 ஆம் ஆண்டில் நுழைந்த அரசர் 1932-ல் அதன் தலைவரானார். 1933-ல் சென்னை மாநகராட்சியாக மாற அதற்கேற்ற முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1934-ல் மீண்டும் மேயரானார்கள். முத்தையவேள் மேயராக இருந்த பொழுதுதான் மேயர்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஓயாறன்

[illegible]

பகல் சுமார் 2 மணிக்கு கதிர்காமம் போய்ச் சேர்ந்தோம். மாணிக்க கங்கைக்குத் தென்கரையிலே பல புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதைக் கண்டேன்.

மூன்று லட்ச ரூபாய் செலவில் யாத்திரீகர்களுக்கான விடுதி அநேகமாகக் கட்டி முடிந்தது. சென்ற ஏப்ரல் மாதத்தில் திறக்கப்பட்ட 'டூரிஸ்ட் சென்டர்'ரில் நவீன வசதிகளுடன் அறைகளுள்ளன. ஒருவர் தங்கக்கூடிய அறைக்கு நாளொன்றுக்கு 5 ரூபாய். பாத்ரூம் வசதியுடன் இருவர் தங்கக்கூடிய அறைக்கு 10 ரூபாயாம். தனிப்பட்டவர் தாழ்வாரத்தில் படுத்திருக்க நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய்.

ஆனால் அங்கு சாப்பாட்டு வசதி கிடையாது. சாப்பிட ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்குத்தான் மந்திரி உட்பட எல்லோரும் வந்தார்களாம். கடைகளும் பல கட்டியிருக்கிறார்கள். அடுத்த வருடத்தில், கதிர்காமத்திலுள்ள கடைகளை எல்லாம் இப்புதிய தெருக்கு மாற்றிவிட வேண்டுமென்றும் அதற்குப்பின் படிப்படியாக அங்குள்ள மடங்களையும் அகற்றிவிட வேண்டுமென்றும் விசேஷக் கமிட்டி தீர்மானித்துள்ளதாக அறிந்தேன். கமிட்டியின் இந்த யோசனை யாத்திரிகர் உள்ளிட்டும் பலருக்கும் கவலை அளித்துள்ளது.

* * *

மாணிக்க கங்கையின்மீது கட்டப்பட்டுள்ள ஒரு சின்னப் பாலத்தைத் தாண்டி கோவிலுக்குச் செல்ல ¼ பர்லாங் தூரமுள்ளது. தெருவெல்லாம் மிக மோசம். ஒரே புழுதி. வெயிலுக்கு ஒதுங்க நிழலுமில்லை. சற்றே நடந்து சென்றதும் கால்கள் சுட்டு சற்றே கொப்பளித்தும்விட்டது. தீ மிதியல் செய்வது எப்படி இருக்குமென்பதை உணர்ந்தேன்.

பல்லாயிரக்கணக்கிலே யாத்திரிகர்கள் வருவதால் இந்த இரு முக்கிய வீதிகளையும் செப்பனிட்டு, தண்ணீர் ஊற்றி, நிழலுக்கு இருபுறமும் மரங்கள் வைக்கப்படாதா? பல வருடங்களாக யாத்திரிகருக்கு அருந்தொண்டு செய்துவரும் மடங்களை எப்படி அகற்றுவதென்பதிலேயே சில 'புண்ணியவான்'கள் கருத்துச் செலுத்துகின்றனரேயன்றி, இந்த முக்கிய குறைபாடுகளை நீக்குவதுபற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை!

பல சாக்கடைத் தண்ணீர் புனிதமான கங்கையில் சேர்ந்து அந்த தீர்த்தத்தைக் கெடுக்கின்றது. ஆற்றுக்குச் செல்லும் படிக்கட்டும், வழியும் ஒரே ஆபாசம். துர்நாற்றம். நாங்கள் சென்றது திருவிழாவுக்கு முன்பாகும். திருவிழாக் காலத்தில் சுகாதார ஏற்பாடுகளை விசேஷமாகச் செய்வர் போலும். ஆனால் கதிர்காமத்தில் தினசரி திருவிழாக் கூட்டம். அதனால் சுகாதார வசதிகளை எந்நாளும் செய்ய வேண்டுவதுடன் புனிதத் தீர்த்தத்தில் சாக்கடை ஜலம் கலக்காமலும் தடுக்க வேண்டியதவசியமாகும். கணுக்கால் அளவுதான் தண்ணீர் ஓடியது. அதில் சாக்கடைகளும் சேர்ந்தால் எப்படி இருக்கும்.

* * *

செல்வக்கதிர்காமத்துக் கு ஆற்றுக்குத் தென்கரையிலிருந்தே காட்டைத் திருத்தி ஒரு நல்ல ரஸ்தா போட்டுள்ளனர். அப்படியே பல கார்களும் செல்லுகின்றன. அங்கு ஆற்றுக்கு ரயில்வே இஞ்சினியர்கள் மூலம் பலத்த பாலம் கட்டியுள்ளனர். பாறைகளூடே அருவி வேகமாய்ப் பாய்கிறது. சுத்தமான தீர்த்தம். மணிக்கணக்காக நீராடினாலும் எழுந்துவரவே மனம்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மில்லை. அவ்வளவு சுகம். இயற்கைக் காட்சிகள் மனதைப் பெரிதும் கவர்கின்றன.

அங்குள்ள பிள்ளையார் கோவிலை கொழும்பைச் சேர்ந்த இரு தமிழ் அன்பர்கள் நல்ல முறையில் புதுப்பித்திருக்கிறார்கள். கோவிலுக்கு முன்புறம் இரவெல்லாம் தீபம் எரியவும் தக்க பாதுகாப்புடன் கண்ணாடிக்கூண்டு அமைத்துள்ளனர். அந்தக் கோவிலும் இப்போது புதுப்பொலிவுடன் விளங்குவதைக் கண்டேன்.

அங்கு தங்கி இருக்க வசதியான மடாலயம் ஒன்று கட்டப்பட்டால் யாத்திரிகர்களுக்கு மிக வசதியாக இருக்கும்.

* * *

போக்கும்வரவுமிரம்பமும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவுமுடிவுமில்லை
தொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந்தானே
தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுகவா சொல்
[illegible] அனந்தமே.

— அருணகிரிநாதசுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும்பற்றிய மகாநாடு உடனடியாக கூட்டப்படவேண்டும்

# இதற்கு முன்னேடியாக அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தவேண்டும்

## யூகோவிலிருந்து தாயகம் திரும்பிய சாஸ்திரி யோசனை

புதுடில்லி, ஆக. 1

வியட்னும் சம்பந்தப்பட்ட சகல நாடுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட மகாநாடொன்றை விரைவில் கூட்டுவது மிகவும் அவசியம் என்று இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி இன்று காலை பாலம் விமானநிலையத்தில் தெரிவித்தார். யுகோஸ்லேவியாவில் நான்கு நாட்கள் சுற்றுவிஜயம் செய்துவிட்டு இன்று காலை அவர் தாயகம் திரும்பினர்.

பாலம் விமான நிலையத்தில் பிரதமர் சாஸ்திரி நிருபர்களிடம் வியட்னும் சம்பந்தமாகத் தெரிவிக்கையில்; வியட்னும் நெருக்கடியை நீடிக்க விடாது அதற்கோர் தீர்வைக் காண சம்பந்தப்பட்ட நாடுகள் அனைத்தும் முயற்சியெடுக்க வேண்டுமென்று கூறினர்.

"ஜெனிவாமாதிரியான மகாநாட்டைக் கூட்ட வேண்டும் வியட்னுமில் அமெரிக்கவிமான குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்பட வேண்டும்" என்று யோசனை வெளியிட்டார்.

**கெய்ரோவில்**

இதற்குமுன் பெல்கிரேட்டிலிருந்து இந்தியா வரும் வழியில பிரதமர் சாஸ்திரி ஐக்கிய அரபு குடியரசு தலைநகரான கெய்ரோவில் சில மணிநேரம் தங்கினர். இங்கு அவர், ஐக்கிய அரபு குடியரசு துணை பிரதமருடனும், மற்றும் ஐ. அ. குடியரசு தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்தினர். யுகோஸ்லேவியாவில் அதிபர் மார்ஷல் டிட்டோவுடன் நடத்திய பேச்சுகள் குறித்தும் இவர்களுக்குத் தெரிவித்தார்.

கெய்ரோவில் பிரதமர் சாஸ்திரி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்: வியட்னும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முன்னர் உரிய சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கு அமெரிக்க விமானங்கள் குண்டுகள் வீசுவதை முதலில் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

"வியட்னுமில் நிலைமை சிரமமாக இருக்கினும் சமாதான முயற்சிகள் அங்கு தொடர்ந்து நடைபெறவேண்டும். இதற்காக நானும் யுகோ அதிபரும் முழு முயற்சி எடுத்து வருவோம். வியட்னும் தகராற்றை தீர்த்துவைக்க மண்டல சார்பற்ற நாடு எதுவும் முன்வரும் பட்சத்தில் அந்த நாட்டுக்கோ அல்லது நாடுகளுக்கோ இந்தியா முழு ஆதரவளிக்கும். இந்த விஷயத்தில் சிலவுடன் எவரும் தொடர்பு கொண்டால் மகிழ்ச்சி அடைவேன்" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

பிரதமர் சாஸ்திரி இந்தியா வந்து சேர்ந்தபொழுது பாலம் விமான நிலையத்தில் அவரை இந்திய உப ராஷ்டிரபதி டாக்டர் ஜாகீர் ஹுசேன், மற்றும் ராஜதந்திரிகள், பிரமுகர்கள் உட்பட பலர் வரவேற்றனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் விமான நிலையத்தில் குழுமி நின்றனர்.

---

## டாக்டர் ஒபேட்டோ

புதுடில்லி ஆக 1

உகண்டா பிரதமர் டாக்டர் ஒபெண்டோ இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார், இவர் இங்கு பத்து தினங்கள் தங்கியிருப்பார்.

கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த ஒரு காமன்வெல்த் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம்செய்வது இதுவே முதற்றடவையாகும். 1959ல் கானு அதிபர் இங்கு வந்தபின்னர், ஆபிரிக்காவின் இரண்டாவது தலைவராக டாக்டர் ஒபேட்டோ இங்கு விஜயம் செய்கிறர்.

---

## வியட்காங் – ஆஸ்திரேலிய துருப்புக்கள் மோதல்

### சைகோன் எல்லையில் சண்டை

சைகோன், ஆக 1

"சைகோன் எல்லையில் வியட்காங் கொரில்லாக்களுக்கும் தென்வியட்னும் அரசாங்க துருப்புகளுக்குமிடையே இன்று அதிகாலை நடைபெற்ற சண்டையில் அரசாங்க துருப்புகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சைகோனின் வடகிழக்கே ஆஸ்திரேலிய துருப்புகளின் முகாமொன்றைத் தாக்குவதில் வியட்காங் கொரில்லாக்கள் இன்று ஈடுபட்டனர். இந்த முகாமுக்கருகில் இருதரப்பினருக்குமிடையே கடுமையான சண்டை நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

**ஹாவாய் மகாநாடு**

50,000 அமெரிக்க துருப்புகளை தென்வியட்னுமுக்கு அனுப்புவதென்ற அமெரிக்க அதிபரின் 'புதியதிட்டம்'பற்றி ஆலோசனை நடத்துவதற்காக ஹாவாயில் இவ்வாரத்தில் உயர் மகாநாடொன்று நடைபெறுகிறது.

**ஹோட்டலில் குண்டுவீச்சு**

நேற்று தென்வியட்னுமில் ஆஸ்திரேலிய துருப்புகள் தங்கியிருந்த ஹோட்டலில் குண்டு ஒன்று வெடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது ஆனல் இதன் விபரம் தெரியவில்லை.

---

## 80 புதுவகை மீன்கள்

பம்பாய் ஆக 1

முற்றிலும் புதுரகமான 80 வகை மீன்களை, அசாதாரணமான வகை கடற்பிராணிகள் 26,400 அடி ஆழத்திலிருந்து கூம்புவடிவல் எழும் ஒரு மலை ஆகியவற்றை இந்து மகா சமுத்திரத்தில் ஜெர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறர்கள்.

---

## பசும்பாலைப்போல கழுதைப் பால்!

### குடிக்குமாறு சிபார்சு

புதுடில்லி, ஆக 1

இங்குகூடிய மத்திய உணவுதரக் கமிட்டி கழுதைப்பால், பசும்பாலைப்போலவே இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஒட்டகப்பாலை உபயோகிக்கலாமா என்பதைப் பரிசீலனை செய்யும்முகமாக இக்கமிட்டி கூட்டப்பட்டிருந்தது.

"கழுதைப்பாலைக் குடிக்கலாம். ஒட்டகப் பாலும் கழுதைப்பாலும் பசும்பாலைப்போலவே இருக்கிறது, மத்திய ஆசியாவில் ஒட்டகப்பால் உபயோகிக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவிலும் நியூஸிலாந்திலும் கழுதைப்பால் உபயோகிக்கப்படுகிறது" என்று கமிட்டி தெரிவித்துள்ளது.

---

## விண்வெளியில் எட்டு நாள் யாத்திரை

### அமெரிக்காவின் அடுத்த திட்டம்

வாஷிங்டன், ஆக 1

மற்றுமொரு விண்வெளிக் கப்பலொன்றை அமெரிக்கா இம்மாதம் 19-ம் திகதி வானவெளிக்கு அனுப்பவிருக்கிறது.

இக்கப்பல விண்வெளி விமானிகளுடன் எட்டு நாட்கள் விண்வெளியில் வலம்வரும், இதுவவரயும் இவ்வளவு நெடுங்காலத்துக்கு அமெரிக்கா முயற்சி செய்திலலை.

132 தடவை உலகை வலம் வரும் இந்தப் பிரயாணத்தில் கார்டுப கப்பர், சார்லஸ் கான்டாட் ஆகிய இருவரும் விண்வெளி விமானிகளாக இருப்பார்கள். [illegible] இருவரும் தனிவிமானிகள்.

### இப்படியும் நடந்தது

சாண்ட்விச், ஆக 1

பிரதான வீதியிலுள்ள ஒரு வீட்டின் இரண்டாவது மாடி அறைக்கு ஒரு பெண்ணும் ஒரு ஆணும் ஒரு ஏணியைவைத்து அதன் துணையுடன் உள்ளே நுழைந்து 5,00,000 ரூபாவை திருடிக் கொண்டு "பறந்து" சென்றுவிட்டனர். பட்டப்பகலில் நடைபெற்ற இந்தத்துணிகர திருட்டை பிரதான வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த பலர் "சும்மா" பார்த்துக் கொண்டிருந்தனர்.

---

## வெளிநாட்டு செய்தி திரட்டு

ஸ்ரீநகர், ஆக. 1

ஸ்ரீநகரில் நேற்றுவரை மொத்தம் 300 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் 16 பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்ட தடைஉத்தரவுகள் தொடர்ந்து இருந்து வருவதாகவும் இங்கு அறிவிக்கப்பட்டது.

**பொலிசாரைத் தாக்கிய பெண்**

செல்ம்ஸ்போர்ட், ஆக 1

பொலிஸ்வீரர் ஒருவரைத் தாக்கிய குற்றத்துக்காக 47வயதுள்ள மேரி பேக்கர் என்ற பெண்ணுக்கு பத்து பவுண்டுகள் அபராதம் விதிக்கப்பட்டது. கோர்ட்டைவிட்டு வெளியேறும்பொழுது அந்தப்பெண் "எதிர்ப்பட்ட கான்ஸ்டபிளை அடுத்த இரு வாரத்தில் இறந்து போவார்" என்று கூறினர்.

**ஜோதிபாசு கைது**

கல்கத்தா, ஆக 1

ஹைதராபாத்திலிருந்து இன்றுமாலை இங்கு வந்துசேர்ந்த மேற்குவங்காள எதிர்க்கட்சித்தலைவர் ஜோதிபாசு, இந்திய பாதுகாப்பு விதிகளின்கீழ் டம் டம் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

**138 குடிசைகள் எரிந்து சாம்பல்**

விழுப்புரம், ஆக 1

கள்ளக்குறிச்சி தாலுகாவிலுள்ள சிறு கிராமத்தில் ஏற்பட்ட பெரும் தீவிபத்தினுல் 138 குடிசைகள் எரிந்து சாம்பலாயின. இதனுல் 181 குடும்பங்கள் வீடின்றித் தவிக்கின்றன. இத் தீவிபத்தில் மொத்தம் ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி 68,500 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 5000 ரூபா மதிப்புள்ள கரன்ஸி நோட்டுக்கள் தீக்கிரையானது.

**100 வயது "இளைஞரின்" சவாரி**

மாஸ்கோ, ஆக 1

160 வயதான ஒருவர், 40 மைல் தூரம்வரை குதிரைச் சவாரிசெய்து விட்டு பின்னர் ரயிலிலும் பிரயாணம்செய்தார், இவ்வளவுதூரம்வரை அவர் பிரயாணம் செய்தது தமது ராஜ்யத்தின் தலைநகரைப் பார்ப்பதற்காகவே என்று "டாஸ்" செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

**தேசிய சுதந்திர தினம்**

லண்டன், ஆக 1

இன்று சுவிற்சலாந்தின் தேசிய தினமாகும். ஜமைக்கா இன்று தனது சுதந்திரதினத்தைக் கொண்டாடியது.

**ரஷ்யா**

**தலைவர்கள் பூங்கா**

பெல்கிரேட், ஆக 1

இந்தியப் பிரதமர் இங்கு விஜயஞ்செய்தபொழுது நேசஉறவு பூங்காவில் சமாதான நினைவாக செடியொன்றை நாட்டினர். நேருஉட்பட பல தலைவர்கள் இப்பூங்காவில் செடிகளை நட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**குற்றச்சாட்டு**

மோல்டா, ஆக 1

சோவியத் யுத்தக் கப்பல்கள் மோல்டாவுக்குச் சமீபத்தில் பயிற்சி நடத்துவதாக பிரிட்டிஷ் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். மோல்டாவிலிருந்து 15 மைல் தூரத்தில் பயிற்சி நடத்தி வரும் சோவியத் யுத்தக்கப்பல்கள் தங்களது மீன் வலைகளைச் சேதப்படுத்திவிட்டதாக மோல்டா மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

**300 பேர் கைது**

கல்கத்தா, ஆக 1

கல்கத்தாவில் இதுவரை 300 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 16 அரசியல் தலைவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்,

**ஏதன்ஸில்...**

ஏதன்ஸ், ஆக 1

கிரேக்க மன்னர் கொன்ஸ்டன்டைன் நேற்று ஏதன்ஸில் கிரேக்க நெருக்கடி குறித்து ஆலோசனை நடத்தினர். மன்னரை, கிரேக்க பிரதமர், பதில் சபாநாயகர், பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர் ஆகியோர் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்

**"ஹிந்தி ஆட்சி மொழியல்ல"**

சென்னை, ஆக 1

அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் நேற்று சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஹிந்தி ஒரு பிரதேச மொழியே தவிர ஆட்சிமொழியல்ல என்றும் ஹிந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்க முடியாது என்றும் கூறினர்.

**போகமாட்டார்கள்**

டோக்கியோ, ஆக 1

அணு ஆயுதங்களை எதிர்த்து சீன ஆதரவாளர்கள் நடத்தி வரும் 10வது மகாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று இரண்டு ரஷ்யதொழிற் சங்கத்தலைவர்கள் நேற்று ஞாபகமாகத் தெரிவித்தனர்.

---

## போதனுசிரியர் இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு - வலிகாமம் வடக்கு சிரேட் பள்ளையில கிருஷ்ண போதனுசிரியராக கடமையாற்றிய கந்தையா வரதராசா அம்பாறைக்கு இடமாற்ற செய்யப்பட்டுள்ளார்,

---

## 45,500 பதிவுத் தபால்கள் களவு

பம்பலப்பிட்டி, ஞாயிறு

கடந்த 36 மாதங்களுள் 48,500 பதிவுத் தபால்களும், வேறுபல தபால் இலாகாவின் பொருட்களும் களவாடப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்துள் 1,630 பேர் தங்கள் பொருட்கள் தவறிப்போனது குறித்து தபால் இலாகாவிற்கும் புகார் செய்துள்ளார்கள்.

பதிவுத் தபால்களைப் பெற்ற மைக்குரிய கையொப்பத்தை தபால் சில்லறை ஊழியர்கள் 1963ம் ஆண்டு தொடக்கம் கொடுப்பதில்லையாம் இக்காலங்களிலேயே இத்தபால்கள் களவுபோயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உண்மை, நேர்மை, பணிவு வாழ்க்கைக்கு அவசியம்"

யாழ்ப்பாணம், திங்

"மாணவர்கள கல்லூரியில் பயிலும் போது, உண்மை, நேர்மை, பணிவு ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்படியானால் தான் எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்."

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில், யாழ் கனிஷ்ட தொழில் நுட்பபாடசாலை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் போதனாசிரியர் திரு வே. அழகேசன் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின் போது கூறினார்.

திரு எஸ். வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் பிரிவுபசாரத்தில், திரு அழகேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:- மாணவர்கள் தவறாக நடந்தால் அதைத் திருத்த முயலவேண்டுமே தவிர, அதற்குடந்தையாக இருந்து முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடக்கூடாது. வைத்தியர் ஒருவர் நோயாளிக்கு மருந்து கொடுக்கும் போது அது கசப்பாகத்தானிருக்கும் ஆனால் காலவடைவில் நோயாளி சுகமடையும் போது மகிழ்ச்சியடைவான். அதுபோலத்தான் மாணவர்களும் உண்மை, நேர்மை, பணிவு ஆகியவற்றை தாங்கள் பாடசாலை நாட்களில் கடைப்பிடித்தால், பிற்காலச் சீவியத்தில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

தலைவர் திரு வன்னியசிங்கம் பேசும்போது கூறியதாவது: கொழும்பில் வேலைபார்ப்பவர்கள். யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றலாகிவர விரும்புவது ஏதாவது சொந்த அலுவல்கள் காரணமாகத்தான் இருக்கும். தமது காணிபூமி அபிவிருத்தி செய்யவோ, அல்லது மக்களுக்கு திருமணஞ்செய்து வைக்கவோ, அல்லது தமது குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காகவோ யாழ்ப்பாணம் வர விரும்புவர், ஆனால் அழகேசன் நிலைமை எதிர்மாறானது. ஏனெனில் அவரது குடும்பம் கொழும்பிலிருக்க யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற வேண்டுமென்ற அவாவினால்தான் அவர் இங்கு வந்தார். ஆசிரிய சேவையிலுள்ள விருப்பத்தினால் தான் இங்குவந்தார், கடமையை சேவையாக நினைப்பவர் அவர். வர்த்தக தொழில் ஸ்தாபனங்களில் இருமடங்கு சம்பளம் பெறக்கூடியவசதியிருந்தும் அவர் ஆசிரிய தொழிலை விடவில்லை இதிலிருந்தே அத்தொழில் அவருக்குள்ள விருப்பந்தெரிகிறது.

செல்வி அமிர்தாம்பிகை சின்னத்துரை உபசாரவாழ்த்துப்பா பாடினார். திருவாளர்கள் எஸ் கிருஷ்ணன் அமிர்தலிங்கம் க சுந்தரலிங்கம் சண்முகலிங்கம் சிதம்பரநாதன் சுப்பிரமணியம் ஆர் ராஜலட்சுமி ஆகியோர் திரு அழகேசனின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். திரு எஸ். சிதம்பரநாதன் நன்றியுரை கூறினார். தேநீர் விருந்தொன்றும் அளிக்கப்பட்டது. திரு அழகேசனின் ஆசிரியரான திரு வேலுப்பிள்ளையும் சமூகமளித்திருந்தார்.

# போதனாசிரியருக்கு பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

"மக்களின் நல்வாழ்வுக்கு பயன்படும் முறையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் என்றும் மக்களால் பாராட்டப்படுவர். அதுவும் பொருளாதாரவிடயத்தில் போதிய ஊக்கமும் உதவியும் செய்யும் கிருஷி போதனாசிரியர்கள் சேவை மேலும் மேலும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்" என்று மாதகல் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினர் கிருஷி போதனாசிரியராக கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் க. வரதராசாவுக்கு மேற்படி சங்கத்தினரால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் திரு. க. கதிரித்தம்பி பேசுகையில் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் மா. சிதம்பரப்பிள்ளை விழாவுக்கு தலைமைவகித்தார். திரு. வரதராசாவின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் தி. சின்னத்தம்பி, மு. நடராசா, ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர். திரு. க. வரதராசா தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்துக்கு நன்றிதெரிவித்தார்.


# திருக்கேதீச்சரத்தில் சுந்தரர் குருபூசை

சுழிபுரம், ஞாயிறு

திருக்கேதீஸ்வரத்தில் வருடாவருடம் சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் நடாத்தும் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை இம்மாதம் 4-ந்திகதி புதன்கிழமை வெகுவிமரிசையாக நடைபெறவிருக்கின்றது. சுந்தரர் சிலையை பிரதிஷ்டை செய்யுமுகமாக சிலையை ஊர்வலமாக கல்லூரியில் இருந்து எடுத்துச்செல்வர். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் சுமார் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் பஸ், வான், வண்டி மூலம் செவ்வாய் பிற்பகல் புறப்படவிருக்கின்றார்கள். பிரதிஷ்டை வைபவத்தையடுத்து பின்வரும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

காலை 10 மணிக்கு குருபூசையும் பஜனையும், மாலை 6 45 மணிக்கு இசைப்புலவர் திரு. எஸ். செல்வத்துரையின் முத்திப்பாடல்கச்சேரி, பின்னர் கல்லூரி மாணவர்களின் காவடியாட்டமும், செல்விஞானகுமாரி தங்கராசாவின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். இரவு 8-45 மணிக்கு செல்வி ராதா சோமசுந்தரம் "மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லார்" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

இதோ!
6 சத விலையில்
சிறந்த-புதிய
மைனா
சிகரெட்
கச்சிதமான காரம், குணம், மணம் பிரியமூட்டும்
பில்டர் முனை! சுகந்தமான தனிச்சுவை!
அத்தனையும் கொண்டது.
சரச விலை கொண்ட தரமான சிகரெட்




கோல்ட் பிளேக், ஆடத், பிளேயர்ஸ் கோல்ட்லீப், மட்டர்கோன், கப்ஸ்டன், பிரிஸ்டல், ஸ்போர்ட்ஸ்மன், திறீரோசஸ், போர்ஏசஸ், பீக்கொக் ஆகிய சிகரெட்டுகளைத் தயாரிக்கும்
சிலோன் டொபக்கோ கம்பனி லிமிட்டெட்
தயாரித்தது.

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களை
வாசனையால் பரிமளிக்கச் செய்யவும்
நறுமணம் கமழும் மனோரம்மியமான
"ராதா"
★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ 999 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ ஜெகன்மோகன் ஜவ்வாது வத்தி
★ பத்மினி ஜவ்வாது வத்தி
மற்றும்
★ லீலாஜவ்வாது ★ ஸ்பெசல் அம்பர்
★ இந்திராணி ★ கிறீன் தர்பார்
வத்திகளையே
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
இலங்கையில் முதல்தரமான தயாரிப்புகள்.
எல்லா வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனாதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 541, 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## Order Nisi

In the District Court of Jaffna

In the marrer of the intestate estate of the late Kandiah Peter Muttiah of Chundikkuly Jaffna. Deceased.

Testamentary No 1573

Jurisdiction.

Jebamany widowof Kandiah Peter Muttiah of Chundikkuly, Jaffna, Petitioner

Vs

Minor

1. Muttiah Enock Jebarajah of do.
2. Lydia Jebadevi daughter of Kandiah Peter Muttiah of do.
3. Kathleen Jebamalar daughter of Kandiah Peter Muttiah of do
4. Muttiah Samuel Jebanathan of do.
5. Ariam Nalliah Mootha thamby of Government dispensary Manipay

Respondents

This matter coming on for disposol lefore N Sivagnasunderam Esqire, District Judge, Jaffna, on the 18th day of November 1964 in the presence of Mr R.Anantha Kumerasamy Proctor on the part of the petitioner and on reading the affidavit dated the 18 October 1964 and petition dated 18 November 1964 of the petitioner

It is ordered that the above named 5th respondent be appointed guardian-ad-litem over the minors the above named 1st to 4th respondents.

It is further ordered that the petitioner above-named be declared entitled to Letters of Administration to the Estate of the above-named deceased as widow of the deceased and that such Letters of Administration be issued to her unless the above-named respondents or any others appear before this Court on or before the 5th day of February 1965 and show Sufficient cause to the satisfiction of this Court to the contrary.

It is further ordered that the abovenamed minors the 1st to 4th respondents should pe prouced in Court on the said date

This 18th November 1964

(Sgd) N.M.J. Rajendram
District Judge

Drawn by:

(Sgd) R. Anantha Kumarasamy
Proctor for Petitioner

5-2-65:-Time to show cause extended to 7-5-65

(Sgd) N.M.J. Rajendram
District Judge

7-5-65:- Time to show cause extended to 6-8-65

(Sgd) N.M.J. Rajendram
District Judge

கொழும்பில்

## நடைபெறும் முதல் மகாநாடு

அம்பலப்பிட்டி, ஞாயிறு

காமன்வெல்த் கந்து தொலை பேசி பகுதியினரின் மகாநாடு முதல் தடவையாக அடுத்த வருடத்தின் கொழும்பில் நடை பெறவிருக்கிறது. இம்மகாநாடு 1966-ம் ஆண்டு ஜனவரி 3-ம் திகதியிலிருந்து 15-ம் திகதி வரை நடைபெறும்.

மலேசியா, இந்தியா, இலங்கை தொலைபேசித் தொடர்புகள் பற்றி இம்மகாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும்.

## இலட்சார்ச்சனை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலில் 1-8-65 தொடக்கம் இருபது நாட்களுக்கு இலட்சார்ச்சனை நடைபெறும். 490

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### திங்கள் 2-8-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசுற்சிந்தனை, 6-55, கத்தோலிக்கசற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-45 திரைஇசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6 54 வீணை — எஸ் மணிபாகவதர், 7-15 பாட்டு — பூமணி ராஜரத்தினம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9-45 நேயர்விருப்பம், 10-15 எங்கள்விருப்பம்,

## அல்லைப்பிட்டியில் வள்ளுவர்விழா

அல்லைப்பிட்டி, திங்கள்

அல்லைப்பிட்டி கிழக்கு வாசிகசாலை சனசமூகநிலையத்தினரால் திருவள்ளுவர்விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பல மாணவமாணவிகளின் இசை, உரைக் கதம்ப நிகழ்ச்சிகளும், பல பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. இ. மகாதேவா பேசும்போது "விழாக்கள் பலவற்றையும் ஏற்படுத்தி அதில் பெரியார்கள் பலரையும் அழைத்து, அவர்கள் ஏதாவது பேச, அவற்றை விளங்கியும் விளங்காமலும் கேட்டிருந்துவிட்டு மாணவர்கள் வீடுசெல்வதை பல இடங்களிலும் பார்த்திருப்பதாகவும் ஆனால் அந்த முறையை மாற்றி மாணவமாணவிகளை நேரடியாக விழாவில்தொடர்பு படுத்தி அவர்களின் அறிவையும், ஆர்வத்தையும் பெருக்க நிலையத்தினர் கையாண்ட புது முறையை எண்ணிப் பெருமை யடைவதாகவும் கூறினார்.

விழாவுக்கு ஆசிரியர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். பண்டிதர் பொ. ஜெகநாதன், திருவாளர்கள் வை. அ. கைலாசநாதன், வை. க. கனகசிங்கம், ம. ஜெயராமன், க. செல்வநாயகம் மற்றும் பலர் பேசினர்.

## மாணவர் தேர்ச்சிக் கழகக் கூட்டம்

கொண்டாவில், ஞாயிறு

கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் தேர்ச்சிக் கழகத்தின் வாராந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. பொன். முத்துக்குமாரன் இலக்கியச் சுவையென்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார். கூட்டத்துக்கு திரு எம் கந்தசாமி தலைமைதாங்கினார்.

கொழும்பு, ஞாயிறு

உள்நாட்டு வருமான வரிப் பகுதிக்கு மாதந்தோறும் 8 00,000 கடிதங்கள் வருகின்றன! இக்கடிதங்களுக்கு பதில் அனுப்புமாறு உத்தரவிடுவதற்கு 150 உத்தியோகத்தர்களே இருக்கின்றனர். இதன்படி ஒவ்வொரு உத்தி[illegible] ஒவ்வொருநாளும் [illegible] கடிதங்களைக் கையாளவேண்டும்.

# மணிவிழாக்காணும் ...

(2-ம் பக்க தொடர்ச்சி)

பதவிக்கு எல்லா வகுப்பாரும் வரத்தக்க வகையில் சட்டம் ஆக்கப்பட்டது. பூண்டி நீர்த் திட்டத்திற்கு அரசர் வழி வகுத்தார்கள். அக்காலத்தில் துணை மேயர் பதவி என்பது கிடையாது. மேயர் பதவி ஏற்ற முத்தையவேள் நகராட்சிக்கு முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தார்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக வானொலி நிலையம் ஒன்றினை முத்தையவேள் தாம் மேயராக இருந்த காலத்தில் சில நண்பர்கள் உதவியோடு ஏற்படுத்தினார்கள் என்ற செய்தியினை இன்று வானொலி கேட்டு இன்பம் அடைந்து கொண்டிருப்பவர்கள் அறிந்திருக்கமுடியாது.

### தந்தையும் மைந்தனும்

இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சில கல்வியாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிலரில் முத்தையவேளும் ஒருவராவர். நாளும் கல்விப் பணிபுரிந்து வருகின்ற அவர்கள் உலகின் போக்கிற்கேற்பக் கல்வியினைப்பற்றி அரிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். நல்ல கல்விக்கொள்கைகளை நிறைவேற்றுவதில் அரசர் கல்வி வல்லுநர். அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோர்களைக் கலந்து நிறைவேற்றி வருகின்றார்கள். ஒரே நேரத்தில் தந்தையார் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் மைந்தர் சென்னைப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் இருந்து அருந்தொண்டாற்றினார்கள். பச்சையப்பன் கல்விநிலையக் காப்பாளர்களுள் ஒருவராக 1928 ஆம் ஆண்டுமுதல் 1963 ஆம் ஆண்டு வரை பணியாற்றி அதன் நிலைத்த வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார்கள். கல்வியமைச்சராக இருந்தபொழுது பச்சையப்பன் கல்லூரிக்கு வேண்டிய கட்டிட உதவிகளையும், நிதி வசதிகளையும் செய்தார்கள். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி துவக்குவதற்கு உதவினார்கள். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுக்களில் பணியாற்றியிருக்கின்றார்கள். கிண்டியிலுள்ள ஐ. ஐ. டி. கல்விநிலையத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்துவருகின்றார்கள். பல கல்விநிலையங்களுக்கும் பொருளை அள்ளிக்கொடுத்திருக்கின்றார்கள். எண்ணற்ற கல்விநிலையங்களில் புரவலராக இருந்துவருகின்றார்கள். இவர் தம் தந்தையார் அண்ணாமலை அரசரால் நிறுவப்பட்ட அறிவின் சுரங்கமாம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இலங்கித் தாய்போல அதனைக் காத்துவருகிறார்கள். மாணவர் தாம் விரும்பிய எந்தப் பாடத்தையும் படிக்க இடந்தரும் கற்பக மரத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் காவலராக இருந்துவரும் கல்வியாளர், முத்தையவேளுக்கு 1955ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது.

முத்தையவேளால் இன்று சென்னை, செட்டிநாடு, சிதம்பரம், அண்ணாமலைநகர் முதலிய இடங்களில் துவக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் தொழில்நுணுக்கப் பள்ளிகள் ஆகியன எண்ணற்றபுரக்கப்பட்டுவருகின்றன. அரசர்முத்தையவேள் ஆயிரமாயிரம் மாணவமாணவிகளின் மனங்களிலும், அவர்தம் பெற்றோர்கள் நெஞ்சங்களிலும் கல்விக்கண் அளித்தவராக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கல்வி உள்ளளவும் முத்தையவேள் உண்டென்ற புகழ்மொழிக்குப் பொருத்தமாகவும் திகழ்கிறார்கள்.

தமிழுக்குத் தொண்டுசெய்வதும், தமிழ் அறிஞர்களைப் பாராட்டுவதும் தம் வாழ்க்கையின் இலட்சியங்களில் ஒன்றாகக்கொண்டவர் முத்தைய[illegible] [illegible] டி. கே. சி. அவர்கள் குறிப்பிடும்பொழுது "தமிழ் வளர்ப்பதில் தற்காலப் பாண்டியனாய் விளங்குகிறார்கள்" என்று குறிப்பிட்டதுண்டு. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் நல்ல ஆக்கப்பணிகள் நிறையச்செய்துவரும் முத்தையவேள் கல்வியமைச்சராக இருந்தபொழுது கோவில்களில் தேவாரம் ஓதுவதற்குரிய முறையை வழிவகுத்தார்கள். தமிழ் வளர்ச்சிக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறிவரும் ராஜாசர் அவர்கள் தமிழாசிரியர்நிலை உயரவேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்குத் தக்க இடமளித்து நான்காவது சங்கம் என்று புலவர் பெருமக்களால் போற்றும்வகையில் தமிழ்ப்பணி புரிந்துவருகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாவில் தமிழறிஞர் சோமசுந்தர பாரதியாருக்கு டாக்டர் பட்டமளிக்க முதற்காரணமாய் இருந்தார்கள். எண்ணற்ற தமிழ்ப்புலவர்கள் அரசரால் பொன்னாடை போர்த்தப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழுக்குப் பொருள் அள்ளிக் கொடுத்து அரசரின் கரங்களால் பட்டம், விருது, கேடயம் பெற்ற புலவர் பெருமக்கள் கணக்கிலடங்கார்.

அரசர் முத்தையா தமிழ் நெஞ்சங்களில் என்றும் அழியாத ஒரு தமிழோவியமாகவும் வறுமையால் வாடித் தாக முன்ன தமிழ்ப்புலவர்கட்கு வாழ்வளிக்கும் ஒரு தண்ணீர் தடாகமாகவும் இருக்கிறார்கள். தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்தையவேளுக்கு என்றும் தனியிடமுண்டு.

வாடிவந்த தமிழிசைக்கு வள்ளல் அண்ணாமலை வான்மழையாக வந்துதோன்றினாரென்றும் அண்ணாமலை என்ற மழையால் புத்துயிர்பெற்று வளர்ந்த தமிழிசைப்பயிருக்கு முத்தையவேள் நல்ல உரமாக விளங்கிவருகிறார் என்பதும் நாடு நன்கறிந்த ஒன்றாகும்.

இன்றுள்ள தொழிலதிபர்களில் நல்ல ஆளுந்திறன் நிரம்பப்பெற்ற முத்தையவேள் தலைசிறந்த தொழிலதிபதியாவார்கள். தொழில் உலகம் முத்தையவேளை 'ஆறையும் நூறாக்கும் முத்தையா' என்றும் 'ராஜா முத்தையா செட்டியார் தொட்டது துலங்கும்' என்றும் புகழ்ந்துகொண்டிருக்கிறது. தனது 28வது வயதிலேயே இம்பீரியல் வங்கியின் இயக்குநர் பொறுப்பினையேற்ற முத்தையவேள் பல தொழில் நிறுவனங்களில் இயக்குநராகவும், தலைவராகவும், பொறுப்பாளராகவும் இருந்துவருகிறார்கள். அண்மையில் கரூருக்கருகில் புலியூரில் நாளொன்றுக்கு 1200 டன்கள் உற்பத்தி செய்யக்கூடிய சிமெந்துத் தொழிற்சாலையொன்றை துவக்கியுள்ளார்கள். அரசரால் பேணி வளர்க்கப்பட்டுவரும் பொன்விழாக் கொண்டாடிய இந்தியன் வங்கியைப் பொது மக்கள் நன்கறிந்ததொன்றாகும். தொழில்களின் தொடர்பாக முத்தையவேள் வெளிநாடுகளுக்குப் பலமுறை சென்று வந்ததுண்டு.

இத்தகைய அருங்குணவாளுகிய அரசர் முத்தையவேள் எறும்பைப் போல் சுறுசுறுப்பான வாழ்க்கையை நாளும் மேற்கொண்டு பிறருக்குப் பயன்படும்வகையில் தன் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்துவருகிறார்கள். அகவாழ்வில் வெற்றிகண்ட முத்தையவேள் புறவாழ்விலும் அரசியல், அறிஞர், கல்வியாளர், தமிழ்க்காவலர், பேச்சாளர், தொழிலதிபர், ஆலோசகர், பண்பாளர் என்று இப்படி எல்லாவகையிலும் போற்றத்தக்கமுறையில் பயன்கருதாது உதவும் மாரிபோல வாழ்ந்து வருகிறார்கள்.

பொதுமக்களுக்குப் பயன்படும் ஊர் நடுவேயுள்ள ஊருணியான கற்பக மரமான ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அறுபதாம் ஆண்டு நிறைவெய்தும் இந்

## சபிண்டீகரண அழைப்பு

தீவுப்பகுதி பால் விநியோக மேற்பார்வையாளரும் (D I S N M S) சப்ததீவு இந்துமகா சபை காரியதரிசியாக கடமையாற்றியவரும், புங்குடுதீவு மேற்கு இரும்பிட்டி காலஞ்சென்ற திரு வேலாயுதர் விசுவலிங்கமவர்களின் சிரேஷ்ட புத்திரனும், வியாங்கொடை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற திரு க குமாரவேலு அவர்களின் சிரேஷ்ட புத்திரி திருமதி அமிர்தகௌரியின் கணவருமாகிய திரு. விசுவலிங்கம் கார்த்திகேசு அவர்கள் சென்ற ஆனி மீ 22-ந் திகதி (6-7-65) செவ்வாய்க்கிழமை சிவபதம் சேர்ந்தார். அவர்களின் ஆத்மசாந்திக்காகச் செய்யும் சபிண்டீகரண கிரியைகள் ஆடி மீ 21-ந் திகதி (5-8-65) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவர்களின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உறவினர்களும் நண்பர்களும் தவறாது சமூகம்தந்து அன்னாரின் ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் திருமதி கார்த்திகேசுவும் மகனும். 719

### தேவை

நல்ல மேசன் தேவை. ஒரு நாளைக்கு 10 ரூபா சம்பளம். மேற்பார்வை செய்து வேலை செய்விக்கக் கூடிய அநுபவம் முக்கியம். நேரில் வரவும், இல, 74 மழைய பூங்காவீதி யாழ்ப்பாணம். 718

வீட்டுக்கு வீடு சாமான்கள் விற்பனை செய்வதற்குப் பெண்கள் வேலை, 3-8-65-ல் நேரடியாக விண்ணப்பிக்கவும். தி நாஷனல் சேல்ஸ் கோப்பரேசன், "சனிபாதகட்டிடம்", 1/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் 711

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில்) வேலைசெய்து அநுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேர்விஸ் பலாலி வீதி கொண்டாவில். 715

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர், இ போ ச டிப்போ, கந்தவனக்கோவில் ஆகியவற்றுக்கருகாமையில் சகல வசதிகளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு நா முத்துக்கிருஷ்ணர் இலட்சுமிபதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 720

### கல்வி

அப்போதிக்கரி, தபால் தந்தியாளர், புகையிரத நிலையத் தலைவர் ஆகிய பரீட்சைக்கு முதலாம் திகதி தொடக்கம் மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பி. ஏ., ஜி. ஏ. கியூ. வகுப்புகளும் நடைபெறுகின்றன.

யாழ். டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 679

ராணியவர்கள் மாண்புமிகு மனைவியார் இராணி மெய்யம்மை ஆச்சியுடனும், மக்களுடனும் வாழையடிவாழையென வளர்ந்து கலைகயாற்று மணவிழும் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்துவோமாக.

முத்தையவேள் சிறந்த ஆலோசகராவார்கள், அரசின் ஆலோசனைகளால் ஆக்கம் பெற்ற வணிகத்துறைகள் பல உண்டு, ஆக்கம் கண்ட நிறுவனங்கள் நிலைத்ததுண்டு.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்ச்சங்கிலியில் சுருக்கிட்டு தற்கொலை

யாழ்ப்பாணம் திங்கள்

ஐந்துவருடத்திற்குமுன் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சித்து, அதன்காரணமாக கோர்ட்டில் இரண்டு வருட கன்கடத்தைப் பிணையில் சென்ற ஒரு வயோதிபர் நன்ருக மது அருந்திவிட்டு, நாய்ச் சங்கிலியை கழுத்தில் போட்டு சுருக்கிட்டு தறகொலை செய்து கொண்ட சம்பவம் கோப்பாய் வடக்கில் நிகழ்ந்துள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபர் கந்தன் நாகமுத்து என்பவரின் மரணவிசாரணையின் போது மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தியபோது, காலஞ்சென்றவரின் மனைவி பொன்னு கூறியதாவது:- காலஞ்சென்றவர் எனது கணவர், நேற்று அவர், முருகவேண்டும் இறைச்சிகறி சமைக்கும்படி கூறிவிட்டு சென்றுவிட்டார், நான் இறைச்சிக்கறி சமைக்க ஆயத்தம் செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது எனது கணவர் நன்ருகமது அருந்திவிட்டு வந்து என்னை பேசி அடித்தார்; வெளியில் போகும்படியும் கூறினார், ஒவ்வொரு நாளும் அவர் என்னுடன் இந்தவிதமாக நடந்து கொள்வார். அன்று கையில் ஒரு நாய்ச் சங்கிலியை வைத்திருந்தார். அதை தனது கழுத்தில் போட்டார் நான் அதைதப்பறிக்க முயன்றேன் பின் சத்தம்போட்டுக் குளறினேன் அவர் கட்டில் ஒன்றில் ஏறி சங்கிலியை தீராந்தியில் மாட்டிவிட்டு, கட்டிலைத் தட்டிவிட்டார். முன்பும் பலதடவை தற்கொலை செய்யப்போவதாக கூறியுள்ளார். ஐந்து வருடத்திற்குமுன் கயிறறை கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சித்தபோது, அயலவர்கள் வந்து காப்பாற்றிவிட்டார்கள் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு இரண்டு வருட நன்னடத்தைபபிணையில் சென்ஞர்.

மருமகள் அன்ன்ம்மா சாட்சியமளித்தபோது: தான் காலஞ்சென்றவரின் மருமகளென்றும் காலஞ்சென்றவர் மனைவியை பேசிக்கொண்டிருந்தாரென்றும் தான் சென்றபோது சங்கிலியால் சுருக்கிட்டிருந்தாரென்றும் தான்பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் கூறினுர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---


REGAL - JAFFNA
NOW SHOWING
CY GRANT
SALLY NEAL
In
CALYPSO
(Cinemascop—Color)


## யாழ். தேசிய விளையாட்டுவிழா ஜே. ஆர். கலந்துகொள்வார்

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் இம்மாதம் 28, 29ந் தேதிகளில் சுழிபுரத்திலும், யாழ்ப்பாணத்திலும் தேசிய விளையாட்டு விழாவை நடாத்தவிருக்கின்றனர். 28ந் தேதி வட்டுகோட்டை உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நீச்சல்போட்டி நடைபெறவிருக்கிறது. நீச்சல் போட்டியையடுத்து காவடியாட்டம், கரகாடம், மேளக்கச்சேரி ஆகியன நடைபெறும்

யாழ்ப்பாணத்தில் 29ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் அதிபர் திரு. ஜே. வான்சன்ட்ன் தலைமையில் மாட்டுவண்டிப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, சயிக்கிள் ஓட்டப் போட்டி ஆகியனவும், மாலை யாழ். திறந்தவெளியரங்கில் பரிசளிப்பு வைபவமும் நடைபெறும். பிரதமவிருந்தினராக ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன கலந்துகொள்வாரென அறியப்படுகிறது.

## தபால் பெட்டி இல்லை

சாவகச்சேரி, ஞாயிறு

சங்கத்தானையில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருக்க ஒரே ஒரு தபால் பெட்டியின் பூட்டு பழுதடைந்து விட்டதால் இந்த தபால் பெட்டி எந்தநேரமும் திறந்தபடியே இருக்கிறது.

இதனுல் சங்கத்தானைமக்கள் கடிதங்களை போடுவதற்கு ஒருமைலுக்கப்பாலுள்ள சாவகச்சேரி தபால்நிலைய பெட்டிக்கே செல்லவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை நெடுநாட்களாக நீடிப்பதால் மீண்டும் ஒருதபால் பெட்டியின் அவசியம்பற்றி எடுத்துக் கூறியும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

---

மானிப்பாய்

## கிராம சபையின் புதிய தலைவர்

யாழ்ப்பாணம், திங்.

மானிப்பாய் கிராமசபையின் புதிய தலைவராக திரு சின்னத்தம்பி மார்க்கண்டு (2-வட்டாரம்) ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் கிராமசபைத் தலைவராகவிருந்த திரு பி.ராஜகுலசேகரம் காலமானதைத் தொடர்ந்தே புதிய தலைவர் தெரிவு நடைபெற்றது.

புதிய தலைவர் 20 வருடம் அரசாங்க சேவையிலிருந்தார்.

---

## மணிவிழாக்காணும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனானவர்கள் பற்பலர். அவர் சிறந்த ஆலோசனையாளர் என்ற காரணத்தினுல்தான் 1955-ம் ஆண்டு மத்திய அரசால்ஸ்ரீகெர்தலைமையில் அமைக்கப்பட்ட இந்திய மொழிக்குழுவும், தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் டாக்டர் சர் சி பி இராமசாமி ஐயர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவும் அரசரைப் பேட்டி கண்டன. நாட்டுநலம் கருதி அரசர் தம் நீண்ட நல வரலாற்றில் எண்ணற்ற ஆலோசனைகளை வாய்ப்புக் கிட்டிய பொழுதெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிருர்கள், ராஜா அவர்கள் ஆங்கிலத்தில் மணிக்கணக்கில் பேசுவது போன்று தமிழில் இனிமையுடன் உள்ளத்து உணர்ச்சிகளை எடுத்து உரையாற்றும் சிறந்த பேச்சாளராவார்கள். முத்தையவேள் பங்குபெருத எவ்வித மேடையும் இல்லையெனலாம், முத்தையவேள் தமது கருத்துக்களை மனச்சிறையில் பூட்டி வைக்காமல் ஒளிவுமறைவு இன்றி வெளிப்படையாகப் பேசும் குணம் படைத்தவர்கள். 35 ஆண்டுகளாக அரச சட்ட மன்றத்தில் ஆற்றிவரும் உரைகள் எண்ணற்ற தொகுதிகளாக வரும் தகுதி படைத்தன, முத்தையவேளின்மேடைப்பேச்சின் சிறப்பினை திரு கவி யோகி சுத்தானந்தபாரதியார் குறிப்பிடுகையில், இவர் மேடையேறினுல் ஐயா உங்கள் விருப்டம்போல் செய்துவிடுகிறேன் என்று எதிராளி சமாதானத்திற்கு வந்துவிடுவான், அல்லதுஇவர் பேசி முடிந்ததும் இணங்கி விடுவான். அவ்வளவு அழுத்தமான பேச்சாளர் என்று புகழ்கின்ருர்.

கொடைவளமிக்க மூவேந்தர்களையும் கடையேழு வள்ளல்களையும் நினைவூட்டி முத்தையவேள் நல்ல புரவலராக வாழ்ந்து வருகிருர்கள். இனி செல்வத்துப்பயனே ஈதல் என்ற புறப்பாட்டுக்கேற்ப வாழ்வு நடத்திவரும் முத்தையக்கோமான் பொருட கொடை, நிலக்கொடை, கல்விக்கொடை, அருட்கொடை ஆகியவற்றில் தலைசிறந்த புரவலராக வாழ்ந்து வருகின்ருர்கள். இவற்

## வெள்ளிதோறும் கூட்டுப்பிரார்த்தனை

கச்சாய், ஞாயிறு

கொடிகாமம் வேலிற் கந்தசுவாமி கோவிலில் சென்ற கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப்பிரார்த்தனையும் விசேஷ பூசையும் நடைபெற்றுவருகிறது.

கோவில் நிர்வாகசபை உபதலைவரும், முன்னுள் தபால் அதிபருமான திரு. பேரம்பலம் செல்லையா தலைமையில் நடைபெற்றுவரும் இக் கூட்டுப் பிரார்த்தனையில் தென்மராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் கலந்துகொள்கிருர்கள்.

---

## திருடர்கள் நடமாட்டம்

குழமுனை, ஞாயிறு

கடந்த சிலநாட்களாக கணுக்கேணி என்னுமிடத்தில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கேற்று முன் தினம் இரவு இவர்கள் ஆறு வீடுகளில் பிரவேசித்துள்ளார்கள். ஆனுல் இவர்கள கைவரிசை எங்கும் பலிக்கவில்லை கடந்தவாரம் இங்குள்ள ஒருவரின் வீட்டில்கூண்டுடன் கோழிகளைத் தூக்கிச் சென்றதும் இவர்களதான் என நம்பப்படுகிறது.

---

## "...யட்ளும்..."

(1-ம் பக்க தொடர்ச்சி)

செய்திருக்கலாம். தமிழ்பேசும் மக்களது சில பிரச்சினைகளையாவது தீர்த்துவைக்க காலஎல்லை போதுமானது. அந்த வேளையில் மக்களது தேவைகள் எதையும் அவர்கள் அனுசவில்லை.

நாங்கள் இன்றைய அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்தாலும் தமிழ்பேசும் மக்களது உரிமைகள் விஷயத்தில் அரசாங்கம் நன்மையான முடிவுகளை எடுத்தால் வரவேற்று ஆதரிப்போம். எங்கள் கொள்கை மக்களுக்காகவே என்றும் நிலைபெறும். நாம் எமது பழைய நண்பர்கள் போன்று தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கவோ, நம்பிக்கைத்துரோகம் செய்யவோ மாட்டோம் என்பதை எப்போதும் உறுதியாகவும் திடமாகவும் கூறுவோம்.

காலஞ்சென்ற தர்மகுலசிங்கத்தின் பிரேதத்தின்மீது எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை பழைய தோழர்கள் மறந்துவிட்டார்கள். அதை நாம் மறக்கவில்லை, அவர் தொழிலாளர்களது நல்வாழ்வுக்காக உழைத்ததுடன் சோஷலிச அரசாங்கம் உருவாகவேண்டுமெனவும் சிங்கள, தமிழ் பேசும் மக்களது ஐக்கியம் பலப்படவேண்டுமெனவும் உழைத்தார்

தேசியஅரசாங்க ஊழல்களை ஒழிக்கப்போவதாகக்கூறி கூட்டுறவு மொத்தவிதானம் போன்றவற்றை தனிநபர்கள் வசம் ஒப்படைக்க முயலுகிறது. இவைபோன்றவற்ருல் முதலாளித்துவத்தை பழையபடி வளர்க்கப்போகிறது. இந்தநிலையில் தொழிலாளர்கள் போராட்டமூலமே உரிமைகளைப்பெற முயலவேண்டும்.

புரட்சிமூலமே உரிமைகளைப் பெறமுடியும் என்பதை திடமாக கூறுவதுடன் தொழிலாளர்கள் பிளவுகளை மறந்து வர்க்கப் போராட்டத்தை நடத்த ஒன்றுசேர வேண்டுமெனவும் தெரிவிக்கவிரும்புகிறேன்"

திருவாளர்கள் ஏ என் வேலாயுதம், மு ஏரம்பமூர்த்தி வி ஏ கந்தசாமி மற்றும்பலரும் பேசினர்.

## உற்சவம் நடைபெருது

யாழ்பபாணம், ஞாயிறு

சென்ற வருடம் ஏற்பட்ட சூருவளியால் பாதிக்கப்பட்டஓமந்தை-மருதோடை கந்தசுவாமி கோயில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இதன் காரணமாக இம்மாதம் 3-ம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த உற்சவம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## தந்தித் தொடர்புகள் மகாநாடு

கொழும்பு, ஞாயிறு

காமன்வெலத் தந்தி தொடர்பு மகாநாடு இம்முறை முதற்தடவையாக கொழும்பில் நடைபெறவிருக்கிறது. 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி முதல் 15-ம் திகதிவரை நடைபெறும் இம் மகாநாட்டில், மலேசியாவிலிருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் காமன்வெல்த் தந்தித் தொடர்பை ஏற்படுத்துவதே முக்கிய இடம்பெறும்.


S. R. S.
ஜவுளி மாளிகை
எமது
சொந்த கைத்தறிகளில்
தயார் செய்யப்பட்ட
★ சேலைகள்
★ வேட்டிகள்
★ சால்வைகள்
★ துவாய்கள்
★ பெற்சீட்டுகள்
முதலியன
எப்பொழுதும் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.
உள்ளூர் உற்பத்திப்
பிடவைகளை வாங்கி
வாழ்க்கைச் செலவை
குறையுங்கள்!
எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.



மேல்நாட்டு மரக்கறிகள் மலிவு விற்பனை
இலங்கை விளைபொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்க சமாஜக் கிளை
ஸ்ரேசன் வீதி, சுன்னுகம்

சுன்னுகத்தில் உள்ள இலங்கை விளைபொருள் உற்பத்தி சமாஜக் கிளைக் கடையில் சுத்தமான உடன் மரக்கறி கோவா, லீக், கரட், பேஞ்சி, முள்ளங்கி பெண்ணுங்காணி, வல்லாரை, இஞ்சி, தேசிக்காய், தேங்காய், தேங்காய் எண்ணை, கொட்டைப்பாக்கு, அன்னுசி இன்னும் பல விற்பனவுக்குரிய மரக்கறிவகைகள் மொத்தமாக முக்கியமாக திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்ந்த இதர நாட்களிலும் இங்கு மரக்கறிகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

விபரங்களுக்கு மேலாளர் இலங்கை விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சமாஜச் சங்கக் கிளை, ஸ்ரேசன் வீதி, சுன்னுகம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும் 491



இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (மஹியங்கனை)
விஜயா (மட்டக்களப்பு) திவோலி (நுவரேலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி) அயன் (மன்னார்)
எம். ஜி. ஆர்.
சரோஜா தேவி
மற்றும் பலர் நடித்த
தேவர் பிலிம்ஸ்
நீதிக்குப்பின் பாசம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org